**செய்தி வெளியீடு எண்.450** **நாள்.5.8.09**

மக்கள் நல்வாழ்வு மற்றும்
குடும்ப நலத்(எம்1) துறை

பத்திரிகை செய்தி

29.6.2009 அன்று திருவிக நகர், சென்னை –11 என்ற விலாசத்தில் உள்ள அஸ்டான்ஸ் பார்மாசியா என்ற மருந்து மொத்த வியாபார இடத்தினை மருந்துகள் ஆய்வாளர்கள் ஆய்வு செய்த போது ரோமா பார்மா (பி) லிமிடெட் சோலன் (இமாச்சல் பிரதேசம்) – 173212 என்ற நிறுவனம் தயாரித்த Tramax என்ற ஊசி மருத்தினை மருத்துவர்களுக்கு மாதிரிகளாக தயாரித்துக் கொடுத்துள்ளனர். இவற்றினை அஸ்டான்ஸ் பார்மாசியா என்ற நிறுவனம் விற்பனைக்கு ஏற்றாற்போல் அவற்றினை மாற்றி விற்பனைக்கு ஏற்பாடு செய்துள்ளனர். மேலும் NUNERVE PLUS என்ற ஊசி மருந்து ரோமா பார்மா (பி) லிமிடெட், சோலன் (இமாச்சல் பிரதேசம்)–173212 என்ற நிறுவனத்தால் விற்பனைக்காக தயாரிக்கப்பட்டது. அதனை அஸ்டான்ஸ் பார்மாசியா மருந்து மாதிரிகளாக மாற்றம் செய்து வைத்திருந்தனர் மற்றும் ரேடிகோ ரெமிடிஸ், சோலன் (இமாச்சல் பிரதேசம்) என்ற நிறுவனம் தயாரித்த LEVASTAN என்ற மாத்திரைகள் உற்பத்தியாளர் விலை ரூ. 23/– அதனை ரூ.45/. ஆக மாற்றி விலை பட்டி ஒட்டியுள்ளனர்.

மருந்துகள் மற்றும் அழகுச் சாதனப்பொருட்கள் சட்டம் 1940 மற்றும் மருந்துகள் விலை கட்டுப்பாடு ஆணை 1995 ஆகியவற்றின் விதிகள் மீறப்பட்டதால் மருந்து ஆய்வாளர் அந்த மருந்துகள், காலி அட்டை பெட்டிகள் முதலானவற்றை அஸ்டான்ஸ் பார்மாசியா நிறுவனத்திலிருந்து பறிமுதல் செய்தார். இது சம்பந்தமாக விரிவான புலனாய்வு செய்யப்பட்டு அந்த நிறுவனத்தின் மருந்து விற்பனை உரிமங்கள் மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநர், மண்டலம்–2 அவர்களால் 29.7.2009 அன்று ரத்து செய்யப்பட்டுள்ளது.

வி.கு. சுப்புராஜ்,
அரசு முதன்மைச் செயலாளர்

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**